# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2017 ஒக்டோபர் மாதம் 03 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.09.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/91)**

அ. 1998 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் சட்டத்தினை மீறிய நான்கு (4) நபர்கள் நீர்கொழும்பு பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையில் பதவிகளை வகிப்பது சட்டரீதியானதாகுமா ?

ஆ. அச் சங்கத்தின் முன்னைநாள் தவிசாளர் மற்றும் தற்போதைய தவிசாளர் ஆகியோர் அதிகார பிரதேசத்திற்கு வெளியில் வசிக்கின்றனர் என்ற குற்றச் சாட்டினை விசாரணை செய்த உத்தியோகத்தர்கள் முடிவினை வழங்காது பின்னடிக்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அக் கூட்டுறவுச் சங்கத்தின் தவிசாளர் அதிகார பிரதேசத்தினுள் பாரிய அளவான எண்ணை நிரப்பும் நிலையம் ஒன்றினதும், ஹாட்வெயார் நிறுவனத்தினதும் உரிமையாளர் என்பது பற்றிய முறைப்பாட்டினை விசாரணை செய்யும் உத்தியோகத்தர்கள் முடிவினை வழங்காது பின்னடிக்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. இக் கூட்டுறவுச் சங்கத்தின் டெண்டர் குழுவின் அங்கத்தவர் ஒருவரும், பிரதித் தவிசாளர் ஒருவருமான நபர் ஒருவர் கனணி தாபனம் ஒன்றின் முகாமையாளராக கடமையாற்றி இக் கூட்டுறவு மற்றும் அக் கனணி தாபனத்திற்கு இடையே சேவை உடன்படிக்கை ஒன்றினை கையொப்பமிட்டுள்ளார் எனவும் அது சங்கத்தின் இடைக்கால யாப்பினை மீறியது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. காலம் கடந்த கடனாளி ஒருவராக சங்கத்தில் இருந்து அகற்றப்பட்ட நபர் ஒருவர் இன்னும் நீர்கொழும்பு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் ஒருவராக இருப்பது சட்டத்திற்கு விரோதமானது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. இவ்வாறான குற்றவாளிகளுக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.09.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/92)**

அ. i. நீர்கொழும்பு மாநகர சபையினால் கொச்சி கடை ஓவிடிய தோட்டத்தில் கழிவினை போடுவது எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

ii. அதற்காக தோட்ட உரிமையாளரின் அங்கீகாரம் ஒன்று இருக்கின்றதா ?

iii. அதற்காக அவருக்கு கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றதா ? மாதாந்தம் எவ்வளவு நிதி செலவு செய்யப்படுகின்றது ?

iv. கழிவினை அகற்றுவதற்காக கேள்வி ஒழுங்குவிதி ஒன்று கடைபிடிக்கப்படுகின்றதா ? எப்போதிலிருந்து ?

v. அகற்றப்படும் கழிவுகளை மட்டப்படுத்துவதற்கு உரிய ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்று பயன்படுத்தப்படுகின்றதா ?

vi. அதற்காக கேள்வி நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டுள்ளதா ?

vii. அதற்காக எவ்வளவு நிதி இது வரை செலுத்தப்பட்டுள்ளது ?

viii. மாதாந்தம் மேற்கொண்ட செலவினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஆ. i. ஓவிடியா தோட்டத்தில் போடப்பட்ட கழிவுகளை மூடுவதற்கு எப்போது தொடக்கம் மண் இடுவது ஆரம்பிக்கப்பட்டது ?

ii. அன்றில் இருந்து இது வரை எவ்வளவு கியூப் மணல் பயன்படுத்தப்பட்டது ?

iii. ஒரு கியூப் மணலுக்காக செலுத்தப்பட்ட நிதி எவ்வளவு ?

iv. இது வரை எவ்வளவு நிதி செலுத்தப்பட்டுள்ளது ?

v. மண்ணினை இடுவதற்காக சட்டரீதியான முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டதா ?

vi. அது என்ன ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.09.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/94)**

அ. i. நீர்கொழும்பு மாநகர சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக எனக் குறிப்பிட்டு வெளிநாடு சுற்றுலா ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா ? அவ்வாறு சென்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ii. எந்தெந்த நாடுகளுக்காக இச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது ?

iii. அச் சந்தர்ப்பத்தில் பங்குபற்றியவர்கள் யார் ? செலவு செய்யப்பட்ட நிதி எவ்வளவு ?

iv. இச் சுற்றுலாவின் போது பெற்றுக் கொண்ட அறிவினைப் பயன்படுத்தி செயற்றிட்ட யோசனைகள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதா ?

v. அவற்றைச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஆ. i. கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்காக ஏதாவதொரு தாபனம் ஒன்று அல்லது பல தாபனங்கள் மாற்று வழி யோனைகளை முன்வைத்துள்ளனவா ?

ii. அப்படியாயின் அப் பிரேரணைகளை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

**04.** **கௌரவ ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/96)**

அ. நீர்கொழும்பு சுங்க வீதியின் கொத்தலாவல பாலத்துக்கு அருகில் வாவிக்கு அண்மையில் குருகே ஜெடிய என்ற பெயரில் பிரபல்யமான “கின்ஸ் ஐலன்ட்” இறங்கு துறை என்ற பெயரில் ஜெடிய ஒன்று உள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அவ் இடத்தில் கட்டுதல் இறங்கு துறை என்று விளம்பரம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

இ. இவ் இறங்கு துறை ஜெயிகா உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டது எனவும் ஓலந்து வாவியின் ஊடாக உல்லாசத் துறை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை மேம்படுத்துவதற்கு நிர்மாணிக்கப்பட்டது என்பதனையும் நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. உல்லாச துறை மேம்பாட்டின் ஊடாக நீர்கொழும்பு மாநகர சபைக்கு மற்றும் மக்களுக்கும் வருமானத்தினை உபயோகித்துக் கொள்வதற்காகவே ஜெக்கியா உதவி வழங்கப்பட்டது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. குருகே என்ற பெயர் கொண்ட தனி வியாபாரி ஒருவரிடம் காணப்படும் "கின்ஸ் ஐலன்ட்" என்ற ஹோட்டலுக்கு வாடிக்கையாளர்களை அழைத்து வருவதற்கான படகுச் சேவைக்காக மாத்திரம் அந்த ஜெடிய இன்று பயன்படுத்தப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. இவ் ஜெடிய திறந்து வைக்கப்பட்ட தினத்தில் இருந்து இன்று வரை வருடம் முழுவதும் நீர்கொழும்பு மாநகர சபை பெற்ற வருமானம் எவ்வளவு என்பதனை வருடா வருடம் வெவ்வேறாக காட்ட முடியுமா ? அவ்வாறான வருமானம் ஒன்று கிடைக்கப் பெறாத விடத்து அதற்குக் காரணம் என்ன ?

**05.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)17/97)**

அ. AP/BP/602/15 ஆம் இலக்க விண்ணப்பப்படிவத்தின் கீழ் நாமலுவ கிராமத்தில் 9 ஏக்கரில் 01 றூட் 32.39 பேர்ச்சைக் கொண்ட பாரிய அளவு காணியை (107 காணித் துண்டுகள்) ஆரம்ப அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அங்கீகாரம் 2015.12.18 ஆந் திகதி நிபந்தனைகளின் கீழேயான கடிதத்தின் மூலம் பண்டாரகமை பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

ஆ. மேலே கூறப்பட்ட கடிதத்தின் இலக்கம் 6, 7, 8, 9, 10, 11, 12 மற்றும் 13 ஆகிய நிபந்தனைகள் இது வரை நிறைவேற்றப்படவில்லை என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. பொது வசதிகளுக்குரிய நிலத் துண்டாக ஒதுக்கப்பட்டுள்ள லொட் இலக்கம் 09 மற்றும் 105 என்ற இடங்கள் அதற்குரிய முறையில் ஒதுக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பாக திருப்திப்படுகின்றீர்களா ? அது என்ன காரணத்தின் கீழ் ?

ஈ. 10 ஏக்கர்களைக் கொண்ட பாரிய அளவு இடமொன்றில் மழை நீரைக் கட்டுப்படுத்தவும் மற்றும் வழிந்தோடுவதற்கு கான் அமைப்பு இல்லாதும் முழுமையான காணியின் நீரும் 2 அடி அகலமான மூன்று கான்களின் மூலமே வழிந்தோடச் செய்யப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ? அது போதுமானது என்பதையும் வயலில் வழிந்து செல்வது சரியானது என்பது தொடர்பாகவும் பிரதேச சபை திருப்திப்படுகின்றதா ?

உ. பாரிய அளவு பல குறைபாடுகளுடன் இக் காணிக்காக இணக்கச் சான்றுதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் நீங்கள் அறிவீர்களா ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ நிமல் சந்திரரத்ன அவர்கள்**

இலங்கையில் அரசாங்கங்கள் காலத்திற்கு காலம் மாற்றம் அடைவதன் கீழ் கல்வித் துறையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்ற படியால் இலங்கையினுள் தேசிய கல்விக் கொள்கை ஒன்றினை தயாரிக்க

வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை அரசிடம் கேட்டுக் கொள்கின்றது.
**(பி/vi(1)17/05)**

**02.** **கௌரவ கே.டி. அருண தீபால் அவர்கள்**

வெள்ளம், வரட்சி மற்றும் ஏனைய இயற்கை அனர்த்த வேளையில் பாதிப்புக்கு உட்பட்டவர்களுக்கு விரைவாக சலுகைகளை வழங்குவதில் ஏற்படும் இடையூறுகளை தவிர்ப்பதற்காக அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒருங்கிய பட்டியலின் 7 ஆவது பகுதிக்கு உரிய சலுகைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மூன்று மாவட்டங்களும் உட்படுமாறு இடர் முகாமைத்துவ நிலையம் ஒன்றினை ஸ்தாபிக்க வேண்டும் எனவும், முதலாவதாக களுத்தறை மாவட்டத்திற்காக பண்டாரகம மற்றும் மத்துகமை தேர்தல் தொகுதி இரண்டிலும் உரிய நிலையங்களை அமைத்து தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக் கை எடுக்க வேண்டும் எனவும் இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi(1)17/06)**

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.09.20 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.